

பாடம் - 4

## பாரதியார் என்ற மஹா மஹா வடிகட்டிய கஞ்சன்!

**[SAL ENERGY - ஜீவாதார சக்தி பற்றிய மிக முக்கியமான கட்டுரை]**

**பெட்ரோல் பற்றவில்லை...**
நம் வீட்டில் இருந்து அருகில் உள்ள ஒரு ஊருக்குச் செல்ல பத்து லிட்டர் பெட்ரோல் தேவை. அது உங்கள் காரில் உள்ளது. கிளம்பும் வேளையில் வீட்டில் உள்ள ஒருவருக்கு உடல் நலம் சரியில்லை என்று வைத்துக் கொள்வோம். அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். எனவே காரில் கொண்டு செல்கிறீர்கள். அதற்கு உரிய பெட்ரோல் செலவாகும் அல்லவா?

மீண்டும் ஊருக்குச் செல்ல என்னும்கின்றோம். அப்போது குறைந்து போன பெட்ரோலை நிரப்பிக் கொண்டு கிளம்புகிறோம்.

இந்த உதாரணத்தை நம் பிறவியுடன் ஒப்பிடலாம். பரிபூர்ண ப்ரஹ்மம் தன்னுள் ஏற்பட்ட சலனத்தால் பராசக்தியாகி ப்ரபஞ்சம் ஆகி, பஞ்சபூதங்கள் ஆகி, ஜீவன்களாகி, மனிதனாகி இன்று நிலைத்து இருக்கிறது. மீண்டும் இவை அனைத்தும் ப்ரஹ்மமயமாவதே வாழ்வின் உள் நோக்கு. அதுவே மனிதப்பிறவியின் ஒரே ஒரு லக்ஷியம்!

ப்ரஹ்மத்தை அடைவது என்பது பக்கத்து ஊருக்குச் செல்வது போல்.பிறவிகள் தான் எரிபொருள். மனிதப் பிறவி எடுத்துள்ள நாம் அன்றாட வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற அடிப்படைத் தேவைகளை ப்ரபஞ்ச சக்தியிடம் வேண்டி நிற்கிறோம்.

மனிதனுக்குத் தேவையான அடிப்படை வாழ்க்கை சக்திகள் எட்டு. அவை தனம்-தான்யம்-சந்தானம்-வித்யா-ஜெயம்-வீரம்-புகழ்-ஆன்மீக பலம். இவற்றையே அஷ்ட லக்ஷ்மிகள் என்று வேதம் உருவகம் செய்கிறது.

இந்த எட்டு ஐஸ்வர்யங்களும் கிடைப்பதற்கு மனிதனுக்கு ஒரு சக்தி இருக்கிறது. அதை **ஜீவாதார சக்தி** - SELF AWARENESS LIFE ENERGY - SAL ENERGY என்று

கூறுகின்றோம்.

பர்சில் இருக்கும் பணத்தின் அளவைப் பொறுத்தே கடை வீதியில் செலவு செய்ய முடியும் அன்றோ? அது போலத்தான் ஜீவாதார சக்தியின் இருப்பின் அளவைப் பொறுத்தே அஷ்ட ஐஸ்வர்யங்கள் கிடைக்கும் என்பது அறிவியல் உண்மை ஆகும்.

மேற்சொன்ன எட்டு ஐஸ்வர்ய சக்திகளும் ஒரு மனிதனுக்கு சரிவர உரிய காலத்தில் வாய்க்கப் பெற்றால் அது அவனது பூர்வ ஜென்ம புண்யத்தால் கிடைத்த பலனே ஆகும்.அம்மனிதனுக்கு SAL ENERGY மிகவும் அதிகம் என்று அர்த்தம்.

சிலருக்கு இவற்றுள் சில ஐஸ்வர்யங்கள் கிடைப்பதற்குத் தாமதம் ஆகிறது, கிடைக்காமலே போகிறது. கிடைத்தும் கை நழுவிப் போய் விடுகின்றது.சிலருக்கு அவர்தம் வாழ்க்கைக்குப் பிறகு அவர்தம் அடுத்த சந்ததியினருக்கு வாய்க்கின்றது.

**பட்ஜெட் பத்மநாபன்**

இந்த மாதம் வீட்டுக்கு செலவு செய்ய பட்ஜெட் போடுகிறோம். அதற்கு சம்பளம் தேவை. வேலைக்குச் சென்று முதல் தேதியன்று சம்பளம் கொண்டு வருகின்றோம்.அதைக் கொண்டு தானே பட்ஜெட் போட முடியும்? பற்றவில்லை என்று இம்மாத வேலைக்கு இம்மாதமே சம்பளம் பெற முடியுமோ?

அதே போல் தான் பூர்வ ஜென்மப் புண்ணியக்கணக்கின் சம்பளம் இந்த ஜென்மத்தின் சுகம், இன்பம், லாபம் அனைத்தும் ஆகும்.பூர்வ ஜென்மத்தின் பாவம் தான் நஷ்டம், துக்கம், வ்யாதி, மன உலைச்சல் என அனைத்துக் கஷ்டங்களும் ஆகும்.

நாம் நினைக்கும் ஒவ்வொரு நினைப்புக்கும் செயலுக்கும் இந்த ஐஸ்வர்ய சக்தியைப் பெறும் ஜீவாதார சக்தி குறைகின்றது.கையில் இருக்கும் பணத்தை மகனின் பள்ளிக் கட்டணம் கட்டினாலும் வீண் செலவு செய்தாலும் குறைவு குறைவு தானே?

ஆனால் வாழ்விற்கு மிக மிகத் தேவையானவற்றை மட்டும் சம்பாதிக்க இச்சக்தியைப் பயன்படுத்தினாலும், அளவுக்கு அதிகமாக வாழ்க்கைத் தேவைகளைச் சம்பாதிக்கப் பயன்படுத்தினாலும் குறைவது உறுதி.

ஆனால் தன்னலம் இல்லாத எந்த ஒரு காரியத்துக்கும் இச்சக்தியைப் பயன் படுத்தும் போது அது இரட்டிப்பு ஆகும். அதைக் தான் மஹான்கள், சித்தர்கள்,

ஞானிகள், யோகிகள் கருத்தில் கொள்கின்றனர்.பாரதியார் இந்த ஜீவாதார சக்தியின் மகிமையை மிகவும் உணர்ந்தவர்.இச்சக்தியைப் பொறுத்தே நாம் பிறவி சுழற்சியை பூர்த்தி செய்யும் திறனும் உள்ளது.

**எப்போது தாய் வீடு வருவது?**
இந்தியாவில் இருந்து உருவர் அமெரிக்கா சென்றார். ஒரு வருடத்தில் திரும்பி வருவாத அம்மாவிடம் கூறிச் செல்கிறார், ஒரு வருடம் ஆகும் போது பயணத்துக்கு உரிய பணத்தைக் கொண்டு அவர் அங்கு ஒரு வீடு வாங்கி விட்டால் என்ன ஆகும்? வர முடியுமா?

சரி, அடுத்த ஆண்டு வரத் திட்டம் போடும் போது அவ்வாண்டும் வேறு ஒரு சொத்து வாங்கி விடுகிறார். மீண்டும் தாய் வீடு திரும்ப முடியவில்லை.இப்படி வருடம் வருடம் ஆனால் என்ன ஆகும்? அதே போல் தான் ப்ரஹ்ம நிலையில் இருந்து சக்தியாகிய மனித ஜீவ நிலைக்கு வந்து விட்டோம். ஜீவாதார சக்தி என்ற பணத்தைக் கொண்டு மீண்டும் தாய்வீடாகிய ப்ரஹ்மத்தை அடைய வேண்டும். ஆனால் ஒவ்வொரு பிறவிகளிலும் பற்பல ஆசைகளால் கட்டுண்டு ஜீவாதார சக்தியை செலவு செய்து கொண்டு வருகிறோம்.முக்தி என்பது பிறவி சுழற்கியில் இருந்து விடுதலை அடைவதே ஆகும். அதற்கு இந்த ஜீவாதார சக்தி மிக மிக முக்கியம்.

**ஜீவாதார சக்தியைக் குறைக்கும் தீய சக்திகள் உண்டோ?**
கண்டிப்பாக உண்டு! அவற்றை **"ஷட் பகை"** என்று கூறுவர். இவை ஆறு விதமான நம்முள் இருக்கும் தீய எண்ணங்கள். இவை மனதில் தோன்றி செயலாக மாறும் போது ஜீவாதார சக்தி குறைகின்றது. அவை

***எல்லாவற்றிற்கும் அதிக ஆசை - வெறி கொள்ளுதல்***

***உலகில் தனக்கு மட்டுமே அனைத்தும் கிடைக்க வேண்டும் என்று எண்ணுதல்.***

***பிறர் முன்னேற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாத மனம்***

***அதீத எதிர்பார்ப்பின் மூலம் வரும் கோபம்***

***பொறாமை குணம்***

***கருமித்தனம் - பிறரைக் குறைக் கூறுதல்***

இவற்றின் அடிப்படையிலேயே பஞ்சமா பாதகம் நிகழும். அவை, கட்டுப்பாடு இல்லாத முறையற்ற உடல் காமம், கள் வெறி, சூதாட்டம், கொலை மற்றும் களவு.

மனதில் இத்தகைய ஷட் பகைகள் எழாத வண்ணம் ஞானமும் விழிப்புணர்வும் ஏற்பட வேண்டும் அவை ஏற்படவே ஆன்மீகமும் மதமும் துணை செய்வன.

**ஜீவாதார சக்தியை அதிகரிக்கும் சக்திகளும் உண்டோ?**

கண்டிப்பாக உண்டு! உண்மையான ஜோதிடப் பரிகாரங்கள், மனமாற்றம், நல்ல எண்ணம், கலைகள், ஸ்துதிகள், வேதச் சடங்குகள், பூஜைகள், வ்ரதங்கள், திருவிழாக்கள், தான-தர்மம், உதவி, பாராயணம், நவரத்னக் கற்கள், வாஸ்து, நாமாவளி, பஜனை, அர்ச்சனை, அபிஷேகம், அலங்காரம் ஆகியன ஜீவாதார சக்தியை அதிகரிக்கும்.

தூய அன்புடன் சுயநலமே இல்லாமல் நம்மால் முடிந்த அனைத்து காரியங்களையும் சமூஹத்து தெய்வார்ப்பணம் எனச் செய்யும் போது அதிபயங்கரமாக ஜீவாதார சக்தி அதிகரிக்கும். அதையே பாரதியார் உணர்ந்து கடைப்பிடித்தார்.

**ப்ரார்த்தனை, கூட்டு ப்ரார்த்தனை, பரிகாரங்கள் பற்றிக் கூற முடியுமா?**

கல்யாணம் உரிய வயதில் ஆக மனிதனுக்கு cutoff point 50 என்று வைத்துக் கொள்வோம்.

கல்யாணம் தடை ஆகிறது என்று வைத்துக் கொள்வோம்.

திருமணஞ்சேரிக்குச் சென்று இறைவனை வணங்கி வரும் போது கல்யாணம் ஆகும் என்று ஜோதிடர் கூறுகிறார்.

ஒரு முறை அவ்வூர் சென்றால் 5 points கூடும் என்பது மறைமுக பதில்.

அதனால் தான் சிலருக்கு ஒரு முறை சென்று வந்தவுடன் கல்யாணம் முடிகிறது. அவருக்கு 45 points SAL ENERGY இருந்திருக்கிறது.

அதே சிலக்கு ஐந்து மாதம் தொடர்ந்து செல்ல வேண்டி இருக்கிறது. அப்போது அவருக்கு இன்னும் points

தேவை என்று அர்த்தம்.

எத்தனை முறை ப்ரார்த்தித்தாலும் பலனே இல்லை என்றால் அந்த அளவுக்கு நாம் deposit கழன்று போய் இருக்கிறோம்!

**பரிகாரம் என்பது என்ன?**

ஒரு ப்ரச்சனை வருகின்றது. அதற்குக் காரணம் நாம் தான். அப்ப்ரச்சனை வந்த போது, "இறைவா! இனி வாழ்வில் மீண்டும் ஒரு முறை ப்ரச்சனை ஏற்படும் வினையை நான் யாருக்கு செய்ய மாட்டேன்!" என்று விழிப்புணர்வுடன் தொழுது மனதால் மாற்றம் பெறுவதே பரிகாரம்.அப்போது தீய வினை குறைந்து கேட்ட பலன் கூடும்.

**இதை எல்லாம் பார்த்தால் பாரதியார் போன ஜென்மத்தில் மிகவும் தீய வினை செய்தாரோ?**
மிகச் சிறிய வயதில் பெற்றோரை இழக்கிறார்.

கல்வி கற்க முடியவில்லை.

வறுமை, பட்டினி, பஞ்சம்.

எடுத்த பல காரியங்கள் வெற்றி தரவில்லை.

சமூஹம் நிராகரிப்பு செய்கிறது.

குடும்பம் முதல் அரசாங்கம் வரை எதற்கும் எதிர்ப்பு.

அல்ப ஆயுளில் சாவு.

அதை விட வ்யாதி.

செத்த போது உடலை எடுக்கக் கூட பணமும் ஆட்களும் இல்லை.

இதை எல்லாம் என்ன என்பதாம்?

அருமையான கேள்வி!பாரதியார் மட்டும் இல்லை, பல மஹான்களின் வாழ்க்கை எடுத்துப் பாருங்களேன்! இதே போல் தான் மிக மிக சவால் வாழ்க்கையாக இருக்கும். காரணம் அவர்கள் தம் ஜீவாதார சக்தியை எதற்குப் பயன்படுத்துவது என்ற விழிப்புணர்வுச் சோதனை செய்து கொள்கிறார்கள்.

**கட்டிய மனைவிக்கும் பெற்ற பிள்ளைகளுக்கும் கூட சோறு போட முடியாது என்றால் அது ஜீவாதார சக்தியை சேமிக்கும் சுயநலம் அன்றோ?**
மிக அருமையான கேள்வி! "நான் என்ற ஐந்தரை அடி ப்ராஹ்மண ஆண் மகன்,

பாரதி என்ற பெயர், கவி, என் திறன், என் பாடல், என் பத்திரிக்கை, என் குடும்பம், என் வீடு இவை எல்லாம் ஏதும் இல்லை. இவை அனைத்துமே என்னுள் இருக்கும் பூர்ண உண்மையான பரம சத்யமே! நானும் அதுவும் ஒன்றே! தத்வமஸி! அகம் ப்ரஹ்மஸ்மி!" என்ற உயர்ந்த ஞானத்தைப் பெருய்கிறார் இவர். அதை வெறும் ஞானமாக வைத்துக் கொள்வதில் என்ன பயன்? அதை விழிப்புணர்வுடன் நடைமுறைப்படுத்தவே பிறவி!

பாரதியார், ரமணர், பாபா, ஏசு, புத்தர், நபி போன்ற இவர்கள் அனைவரும் முற்பிறவியில் பெற்ற பரஞானத்தை நடை முறைப்படுத்த வருகிறார்கள்.

நானும் சத்யமும் வேறல்ல என்ற விழிப்புணர்வை உணர்ந்த கதியில் அங்கு நாம் இருந்து செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. அனைத்தையும் இறை சக்தி கையாள்வதை ஞானி உணர்ந்து கொள்கின்றான். அதுவே **"சும்மா இருக்கும் நிலை, மனம் அடங்கிய நிலை, மனிதன் தன்னைக் கட்டும் நிலை"**. அதையே இவர் வாழ்க்கை முழுதும் பயிற்சி செய்கிறார். அதனால் தான் மகளுக்கு வ்யாதி வந்த போதும் அவர் அமைதியாக இருக்கிறார். தன் மனைவி தன்னை நம்பாமல் தன் உறவினரின் உதவியுடன் மூத்த மகளுக்கு மணம் முடித்ததையும் அவர் ஏற்றுக் கொள்கிறார்.

***"அனைத்தும் நான்" என்ற உண்மை புரியும் போது அன்பு வர வேற்றுமை ஓடியே போய் விடும்.அதனால் தான் அவருக்குக் கழுதைக் குட்டியும் குழந்தையும் ஒன்றே! பசியும் அறுசுவை உணவும் ஒன்றே! அமைதியும் புயலும் ஒன்றே! சென்னையும் புதுவையும் ஒன்றே! பார்த்தசாரதி ஸ்வாமியும் குவளைக் கண்ணனும் ஒன்றே!தான் புதிய ஆடை அணிவதும், தெருவில் போகும் ஏழை தன் ஆடையை அணிவதும் ஒன்றே! தன் வீட்டு வேலைக்காரி அம்மாக்கண்ணும் மஹான் அரவிந்தரும் ஒன்றே, தன் மகள்களும் சித்தப்ரஹ்ம வ்யாதி வந்த சிறுவனும் ஒன்றே, வினாயகனும் சக்தியும் அல்லாவும் ஏசுவும் கண்ணனும் ஈசனும் ஒன்றே!***

இந்த நிலையே பூரண சரணாகதி நிலை!
உள்ளதை உள்ளபடி ஏற்றுக்கொள்ளும் தன்மையே சரணாகதி!
அதை பாரதியார் மிக perfect ஆக நடைமுறைப்படுத்தினார்.
அதனால் தன்னை முழுவதும் சேவைக்கு என அர்ப்பணித்த பாரதியாரின் குடும்பத்தை அவர் தம் தோழர்கள், குடும்ப நபர்கள் மூலம் இறை சக்தி வழி செய்தது.
இன்று அவரது பரம்பரை செல்வசெழிப்புடன் வாழ்கின்றது.

**ஆனால் அவர் வாழ்க்கையில் பல இடங்களில் பொருளுக்கு வேண்டிய போராட்டம் உள்ளதே?அவர் பாடல்களும் அவற்றைக் காண்டுமே?**
உண்மை! அப்போராட்டம் அவருக்குள் இருந்தது. இதை ஒரு tag of war என்றே சொல்லலாம். ஆனால் அவரது விழிப்புணர்வே வென்றது. கவி என்ற நிலையில் இறை சக்தியிடம் சமூஹத்துக்கு என அவர் பலவற்றை வேண்டுகின்றார்.

தன் ஜீவாதார சக்தியைத் தன் கவித்திறமையை வெளிக்கொண்டு வந்து அதன் மூலம் தேச மக்களை விழிப்புணர்வுச் செய்வதற்கு மட்டுமே மிக மிக அதிகம் பாரதியார் பயன்படுத்துகிறார்.அதனால் தான் அவர் மஹாகவி-அமரகவி-தீர்க கவி ஆனார்.

தன் ஜீவாதார சக்தி மூலம் தான் ஆற்றிய சேவைகளின் அளவை உணர்ந்து அவர் ப்ரபஞ்ச சக்தியின் ஆளுமையில் தன் ஆயுளை 38 எனச் சுருக்கிக் கொண்டார்.அதை அகால மரணம் என்றே கொள்ள முடியாது.ஆண்டாள் - 18, சம்பந்தர் -16, சுந்தரர் - 24, சங்கரர் - 36 இவை இவர்கள் வாழ்ந்த காலம்.

இந்தக் கட்டுரையின் அடிப்படையில் அவரது வாழ்க்கை நுட்பத்துடன் காணும் போதே அவரை மஹான் எனவும் சித்தர் எனவும் ஆத்ம ஞானி எனவும் ப்ரஹ்ம ஞானி எனவும் தெய்வம் எனவும் ஏற்க முடியும்!இல்லையேல் அவர் ஒரு மூடன், பிழைக்கத் தெரியாதவன், தரித்திரம் பிடித்த ப்ராஹ்மணன், போதைப் பேர்வழி, பித்துப்பிடித்தவன், அகம்பாவக் கவி என்றே எண்ணத் தோன்றும்!

இக்கட்டுரை நம்மை விழிப்புணர்வு செய்ய வைக்கும் என்பதில் ஐயம் இல்லை!
பாரதியார் நம் வாழ்க்கையில் மிகப்பெரிய ஞானாச்சரியனாக இருந்து வழி நடத்துவார்!
ஓம் சக்தி!

மதராஸ், செப்டம்பர் - 23, 2012.